செய்தி வெளியீடு எண்: 663 நாள்: 08.10.2017

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (8.10.2017) சேலம் மாவட்டம், வனவாசிப் பகுதியில் நடைபெற்ற பல்வேறு அரசு துறைகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கி விழாப்பேருரை ஆற்றினார்கள்</u>**

நீங்கள் வைத்த கோரிக்கையை என்னிடத்திலே இந்த மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று அப்பொழுதே ஆணையிட்டார்கள். அதை நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம் இப்பொழுது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே, இந்த பாலிடெக்னிக் கல்லூரியின் மூலமாக இந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இந்தப் பகுதியிலே குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். சுமார் 10.6 ஏக்கர் நிலப்பரப்பிலே இநதக் கல்லூரி பிரம்மாண்டமாக உருவாக இருக்கின்றது. இது ஒரு மையப்பகுதி. இங்கிருந்து மேட்டூர் தொகுதி, திரு செம்மலை தொகுதியை பார்த்தீர்களானால், மேச்சேரி ஒரு 15, 16 கிலோமீட்டர், காவேரி 7 கிலோமீட்டரிலிருந்து மேட்டூர் தொகுதி ஆரம்பிக்கிறது. இங்கு பார்த்தீர்களானால், ஓமலூர் தொகுதி, கிட்டத்தட்ட 8 கிலோமீட்டரில் தொடங்குகிறது. இந்தப்பக்கம் பார்த்தீர்களானால், சங்ககிரி சட்டமன்றத் தொகுதி, ஒரு 10 கிலோமீட்டரில் தொகுதி இருக்கிறது. ஆகவே, இது ஒரு மையப் பகுதியில் தான் இந்தப் பகுதி இருக்கிறது. ஆகவே, இதை தேர்வு செய்து இந்த மூன்று சட்டமன்றத் தொகுதியின் அருகாமையில் இருக்கின்ற சட்டமன்றத் தொகுதி எடப்பாடி சட்டமன்றத் தொகுதி இருக்கின்ற இந்தப் பகுதியில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்தில் நல்ல கல்வி கற்பதற்காக இந்தக் கல்லூரியை மாண்புமிகு அம்மாவினுடைய ஆசியோடு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டிலிருந்ருது, இந்தக் கட்டடம் கட்டிமுடித்தவுடன் மாணவர் சேர்க்கை சேர்க்கப்பட்டு கல்வி கற்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல **எட்டிகோட்டமேடு தொகுதியில்** பி.எட். கல்லூரி இது சங்ககிரி தொகுதிக்கும், எடப்பாடி தொதிக்கும் நடுவில் இருக்கிறது. இந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் பி.எட். படிக்க வேண்டுமென்று சொன்னால், தனியார் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும், அதிக கட்டணம் செலவாகிறது. ஆகவே, ஏழை குடும்பத்தில் இருக்கின்ற மாணவ, மாணவிகள் பி.எட். படிக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்த கட்டணத்தில் நம்முடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்ககிரி தொகுதியில்

புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற பொழுதே, கோரிக்கையை ஏற்று உத்தரவு வழங்கினார்கள். இப்பொழுது கட்டடம் கட்டி, அடுத்த ஆண்டு அங்கேயும் மாணவர் சேர்க்கை சேர்க்கப்படும். ஆக, ஒரே நேரத்தில் பி.எட். கல்லூரிக்கும், பாலிடெக்னிக் கல்லூரிக்கும் இங்கேயே அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு மற்றும் கலைக் கல்லூரியை எடப்பாடியிலிருந்து சங்ககிரிக்கு போகின்ற வழியில் நமக்கு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும், இங்கே அடிக்கல் நாட்டியிருக்கிறோம். அதேபோல, அயோத்திப்பட்டினம் ராமலிங்கம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டடம் கட்டுவதற்கும் இங்கே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் சேர்ந்து 30.56 கோடி திட்டத்தில் அடிக்கல் நாட்டியிருக்கிறோம். உங்கள் முன்னிலையிலே இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அம்மாவினுடைய ஆட்சி தான் நிறைய திட்டங்கள், நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பாக, இந்தப் பகுதிக்கு செல்லுகின்ற பொழுது, நங்கவள்ளி பேரூராட்சி மக்கள், வனவாசியில் இருக்கக்கூடிய கொங்கணாபுரம் பேரூராட்சி மற்றும் இதை சுற்றியுள்ள ஊராட்சி மக்களெல்லாம் போக்குவரத்து வசதி வேண்டுமென்று கேட்டீர்கள். இந்த போக்குவரத்து வசதியை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அம்மாவிடத்தில் கோரிக்கை வைத்தவுடனே, நீங்கள் முதல்முதல் கோயமுத்தூருக்குத் தான் வனவாசி, நங்கவள்ளி, ஜலண்டாபுரத்திற்கு கேட்டார்கள். உடனடியாக அம்மா உத்தரவு போட்டு, அதை நிறைவேற்றிய ஆட்சி அம்மாவினுயை ஆட்சி. கோயமுத்தூருக்கு மட்டுமல்ல, கோயம்புத்தூர், மேட்டூர், சேலத்திற்கு, ஈரோட்டிற்கு என்னென்னல்லாம் பேருந்து வேண்டுமென்று கேட்டீர்களோ, அங்கெல்லாம் பேருந்து இயக்கியாகிவிட்டது. நல்ல விரிவான சாலை ஏற்படுத்தி போக்குவரத்து நெரிசல் இல்லாத அளவிற்கு இன்றைக்கு செயல்படுத்தப்பட்டிருக்கின்றத. தேர்தல் நேரத்தில் செல்கின்ற பொழுது, கடுமையான குடிநீர் பிரச்சினை நிலவிக் கொண்டிருந்தது. இங்கு இருக்கின்ற மக்கள் எல்லாம் கூட்டுக் குடிநீரை நிறைவேற்றித்தரவேண்டுமென்று சொல்லுங்கள் என்று கோரிக்கை வைத்தீர்கள். அந்தக் கோரிக்கைகளை அம்மாவிடத்தில் சொன்னவுடன், அம்மா அவர்கள் மேச்சேரி வட்டம், நங்கவள்ளி வட்டம் இரண்டையும் இணைத்து கூட்டுக் குடிநீர் திட்டம் 158 கோடி ரூபாய் தொடங்கி இன்னும் நான்கு மாதத்தில் முழுப் பணி நிறைவடைந்து, இந்த 2 ஒன்றியங்களில் இருக்கும் ஊராட்சி, பேரூராட்சி பகுதிகளுக்கு நிலையான பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வழங்கும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் இன்றைக்கு நிறைவேற்றிவிட்டோம். அதேபோல, கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டீர்கள், அங்கு கட்டிக்

கொடுக்கப்பட்டது. சின்னத்துறையில் அரசு பள்ளிக்கு கட்டடம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் கட்டிக் கொடுத்தோம். நங்கவள்ளியில் சென்ட்ரல் பேங்க் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையிலிருந்து அங்கே ஒரு அலுவலகம் வேண்டுமென்று சொன்னீர்கள், அதுவும் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. வனவாசிப் பகுதியில ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்திருக்கிறோம். நங்கவெளியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக உயர்த்தவேண்டும் என்று சொன்னீர்கள், அதையும் நிறைவேற்றி இன்றைக்கு பயன்பாட்டில் இருக்கிறது. ஆகவே, என்னவெல்லாம் கேட்டீர்களோ அவையெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ரேஷன் கடை கேட்டீர்கள், வனவாசியில் அதையும் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். ஆகவே கேட்டதெல்லாம் அம்மாவினுடைய ஆட்சியிலே உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் பல திட்டங்கள் உங்களுக்கு வழங்க இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளிய மக்களின் அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து, அதை உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நம் மாவட்டத்திற்கு பெருமை கிடைத்திருக்கின்றது, குறிப்பாக தமிழகத்திலே 234 தொகுதிகள் இருக்கின்றது. அதில் எடப்பாடி தொகுதிக்கு தான் முதலமைச்சர் என்ற மிகப் பெரிய பொறுப்பு அம்மாவினுடைய ஆட்சியில், உங்களுடைய ஆதரவோடு இன்றைக்கு நான் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 7 மாதம் நிறைவடைந்து 8வது மாதம் நடந்து கொண்டிருக்கின்றது. பலமுறை இங்கு வரலாம் என்றாலும் கூட, பல்வேறு வேலைப்பளுவின் காரணமாக வர இயலவில்லை. ஆகவே, இந்த ஒரு தொகுதி மட்டுமல்ல, 234 தொகுதியிலும் கவனம் செலுத்தக்கூடிய நிலையில் நான் இருக்கின்றேன். ஆகவே, நீங்கள் என்னென்ன கோரிக்கையெல்லலாம் கொடுத்தீர்களோ, அதையெல்லாம் நாங்கள் கையில் வைத்துக்கொண்டு, அவ்வப்பொழுது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், எதுவும் விடுபடவில்லை. இப்பொழுது கூட, ஜலண்டாபுரத்தில் ஏரியில் கழிவு நீர் சேருகிறது, சுத்தப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அங்கே சுத்திகரிப்பு கருவியை நிறுவி, அதன் மூலம் சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்னும் பல கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். அவையெல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்து, நம்முடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற மக்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள், ஆகவே தான் எனக்கு உங்களுடைய நல்ல ஆசியோடு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆசியோடு தமிழகத்திலே முதலமைச்சர் என்ற மிகப் பெரிய பொறுப்பு

கிடைத்திருக்கின்றது, மாவட்டத்திற்கும் பெருமை, நம்முடைய தொகுதிக்கும் பெருமை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இந்த மாவட்டம் வளர்ச்சி பெறுவதற்கும், இந்த சட்டமன்ற தொகுதியில் இருக்கும் மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக குறுகிய காலத்திலே ஏற்பாடு செய்த அனைத்து உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**